# அழைப்புப் பணி

Moulaviya M.Y. Maziyya M.A.

## அடிப்படைகளும் வழிமுறைகளும் முக்கியத்துவமும்

அல்லாஹ் கூறுகின்றான்:

وَمَنْ أَحْسَنُ قَوْلًا مِّمَّن دَعَا إِلَى اللَّهِ وَعَمِلَ صَالِحًا وَقَالَ إِنَّنِي مِنَ الْمُسْلِمِينَ

யார் அல்லாஹ்வின்பால் அழைத்து , தானும் நல்லறம் புரிந்து , நிச்சயமாக நான் முஸ்லிம்களில் உள்ளவனே என்று கூறுகின்றானோ அவனைவிட அழகான வார்த்தையை உடையவர் யார்?

**(ஹாமீம் ஸஜ்தா: 33)**

## அழைப்புப் பணி என்பது:

மார்க்க விஷயத்தில் அறிவும் ஞானமும் உள்ள ஒரு முஸ்லிம் தன்னால் முடிந்த அளவுக்கு மனிதர்களுக்குத் தமது மார்க்க விடயங்களை சொல்லிக் கொடுத்தல், நல்லறங்களின்பால் அவர்களைத் தூண்டுதல், நிகழ்ந்து கொண்டிருக்கின்ற தீமைகளிலிருந்து அவர்களைப் பாதுகாத்தல், நிகழவிருக்கின்ற கெடுதிகள் பற்றி அவர்களை எச்சரிக்கை செய்தல் என்பனவாகும். இதன் மூலம் ஈருலகிலும் அனைவரும் வெற்றிபெறுவர் . இந்த வரைவிலக்கணத்திலிருந்து தஃவாப் பணியின் 4 அடிப்படைகள் தெரியவருகின்றன. அவை:

1) **அழைப்புப் பணியின் உள்ளடக்கம்**
2) **அழைப்பாளன்**
3) **அழைக்கப்படுவோர்**
4) **வழிமுறைகள்**

### அ) அழைப்புப் பணியின் உள்ளடக்கம்:

- மார்க்கத்தின் அடிப்படைகளும் அவற்றின் கிளைகளும்,
- நம்பிக்கைக் கோட்பாடுகளும் வணக்க வழிபாடுகளும்.
- பண்பாடுகளும் கொடுக்கல் வாங்கல்களும்.
- கடமைகளும் ஸுன்னத்தானவைகளும்.

- ஏவல்களும் விலக்கல்களும்.
- நல்லறங்களும் தீயவைகளும்

### ஆ) அழைப்புப் பணியை மேற்கொள்பவர் (அழைப்பாளன்)

இவரிடம் சரீஅத் கூறும் தகைமைகளும், மார்க்கத்தில் ஞானமும் இருந்திடவேண்டும். இவர் சத்தியத்தின்பால் மக்களை அழைப்பார்; அவர்களுக்கிடையே ஒற்றுமையை ஏற்படுத்தவார்; சத்தியத்தை உரக்கச் சொல்வார்; இப்பணியை மேற்கொள்ளும் போது எதிர் கொள்ள வேண்டிவருகின்ற துன்பங்களைச் சகித்துக் கொண்டு, தொடர்ந்து தம் பணியில் ஈடுபடுவார்; வழிதவறிச் செல்வோரைச் சீர் திருத்துவார்; விரோதிகள் மற்றும் எதிரிகளின் சதிகளில் இருந்து இஸ்லாமிய உம்மத்தினரைப் பாதுகாப்பார். அவ்வாறே அறிவிலிகள் மற்றும் குழப்பவாதிகளின் கெடுபிடிகளில் இருந்தும் சமூகத்தைப் பாதுகாப்பார்.

ஒரு சிறந்த சமூகம் என்பது ஆளுமை, உளத்தூய்மை, இறையருள் போன்றவைகளைப் பெற்ற சிறந்த சீர்திருத்தவாதிகளின் அழகிய பணியின் வெளிப்பாடாகும். ஆகவே, நேர்மையான ஆட்சியாளர், தலைசிறந்த அறிஞர், ஆழ்ந்த ஞானமுள்ள சட்ட மேதை, தூய எண்ணமுள்ள அழைப்பாளன் மற்றும் ஆசிரியர், உண்மையான முஜாஹித் (போராளி) அல்லாஹ்வின் பணிகளுக்கென்று தம்மை அர்ப்பணம் செய்து கொண்டவர் முதலான அனைவரும் இஸ்லாமிய அழைப்பாளர்கள் பட்டியலில் அடங்குவர்.

அழைப்புப் பணியானது அகீதா, மார்க்க அறிவு, தெளிவு, அமுல்படுத்தல் போன்றவற்றை உள்ளடக்கி நிற்பது போலவே ஒரு அழைப்பாளனிடமும் சில பண்புகள் இருந்திட வேண்டும் என்கின்றது இஸ்லாம்.

### இ) அழைக்கப்படுவோர்:

இவர்கள் இரண்டு வகையினராவர்:

1. முஸ்லிம்கள்
2. மாற்று மதத்தவர்கள்

இவர்களில் முதலாவது சாராரை தமது மார்க்க விடயத்தில் பிடிப்புள்ளவர்களாகவும், அதன் கடமைகளை ஏற்று நடக்குமாறும், தடுக்கப்பட்டவைகளைத் தவிர்த்து நடக்குமாறும் அழைப்பாளர்கள் ஏவ வேண்டும். இரண்டாவது பிரிவினரான மாற்று மத்த்தவர்களை இஸ்லாத்தின் பால் அழைக்க வேண்டும்.

பொதுவாக அழைக்கப்படுவோர் பல்வேறுபட்ட தரங்களிலும் காணப்படுவர். அவர்களின் இயல்புகளும் வேறுபட்டுக் காணப்படும். அறிவுத் துறையிலும் இவர்கள் ஆளுக்கு ஆள் வேறுபடுவர்.

இதனால் தான், இஸ்லாத்தைப் புறக்கணிக்கின்ற ஒரு மாற்று மதத்தவரை அல்லது கடவுளை மறுக்கின்ற ஒரு நாத்திகனை அழைப்பது ஒரு முஸ்லிமை அழைப்பதிலிருந்து வித்தியாசப்படுகின்றது. அதேபோன்று படித்த ஒரு மனிதனை அழைப்பது ஒரு பாமர மனிதனையோ, ஒரு அறிவிலியையோ அழைப்பதிலிருந்து வேறுபடுகின்றது.

அவ்வாறே ஒரு ஏழையை அழைப்பது போன்று ஒரு பணக்கார வர்க்கத்தவரை அழைக்க முடியாது. ஒரு வயோதிபரை அழைப்பது போன்று ஒரு வாலிபரை அழைக்க முடியாது. ஒரு பலவீனமான மனிதனை அழைப்பது போன்று ஒரு பலசாலியை அழைக்க முடியாது. அழைக்கப்படுவோர் பல தராதரங்களையுடையவர்களாக இருப்பர். அவர்களுடைய சந்தர்ப்ப சூழ்நிலைகளும் வேறுபட்டவையாக இருக்கலாம்.

எனவே, இவை அனைத்தையும் அறிந்திருப்பதும், இவற்றைக் கவனத்திற் கொண்டு செயற்படுவதும் அழைப்பாளர்கள் மீதுள்ள கடமைகள் ஆகும்.

## ஈ) அழைப்புப் பணியின் அணுகுமுறைகள்:

### அழைப்புப் பணியின் போது கையாள வேண்டிய வழிமுறைகள்:

A. அழைப்பாளனும் அவரிடமுள்ள கல்வித்திறன் மற்றும் மேற்கொள்கின்ற அனுகுமுறை
B. அழைக்கப்படுவோரின் தராதரங்கள், நிலைமைகள்.
C. அழைக்கப்படுகின்ற விடயம் (கடமைகள் அல்லது தடுக்கப்பட்டவை)

ஆகிய வற்றின் அடிப்படையில் வித்தியாசப்படுகின்றன. இதனைக் கீழ்வரும் வசனம் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது. அல்லாஹ் கூறுகின்றான்:

ادْعُ إِلَى سَبِيلِ رَبِّكَ بِالْحِكْمَةِ وَالْمَوْعِظَةِ الْحَسَنَةِ وَجَادِلْهُم بِالَّتِي هِيَ أَحْسَنُ إِنَّ رَبَّكَ هُوَ أَعْلَمُ بِمَن ضَلَّ عَن سَبِيلِهِ وَهُوَ أَعْلَمُ بِالْمُهْتَدِينَ

**ஞானத்தைக் கொண்டும், அழகிய உபதேசத்தைக் கொண்டும் உமது இரட்சகனின் பாதையில் அழைப்பீராக! இன்னும் மிகச் சிறந்த முறையில் அவர்களுடன் தர்க்கம் புரிவீராக.**

(அந்நஹ்ல் : 125)

மேலும் அல்லாஹ் கூறுகின்றான்:

قُلْ هَـذِهِ سَبِيلِي أَدْعُو إِلَى اللّهِ عَلَى بَصِيرَةٍ أَنَاْ وَمَنِ اتَّبَعَنِي وَسُبْحَانَ اللّهِ وَمَا أَنَاْ مِنَ الْمُشْرِكِينَ

**இதுவே எனது பாதை நானும் என்னைப் பின்பற்றியவர்களும் தெளிவான சான்றின் அடிப்படையில் அல்லாஹ்வின் பால் அழைக்கின்றோம்.**

(யூஸுப் : 108)

ஆகவே, ஞானம் என்பதும், தெளிவான சான்று என்பதும் அழைக்கப்படுவோரின் தராதரங்கள், நிலைமைகள், இயல்புகள் போன்றவற்றை ஒரு அழைப்பாளர் கவனத்திற் கொள்வதாகும். ஆகவே, கடமைகளை ஏற்று நடப்பதற்கு அவர்களைத் தயார்படுத்த முன்னர், அவர்கள் மீது அதிகமான கடமைகளைச் சுமத்திவிடக்கூடாது. மேலும் கடமைகளை உணர்த்தும் போது, அழைக்கப்படுவோரின் தராதரத்திற்கும் நிலைமைகளுக்கும் ஏற்றவாறு ஞானம், அழகிய உபதேசம், சிறந்த முறையிலான தர்க்கம் புரிதல் போன்ற 3 வழிமுறைகளிலும் பொருத்தமானதைக் கையாள்வது அழைப்பாளன் மீதுள்ள கடமையாகும்.

எந்த நிலைமையிலும் அழைப்புப் பணியின் வழிமுறைகள் என்பது விரிவானதொரு குத்பாப் பேருரையை நிகழ்த்துதல், உருக்கமான தொரு உபதேசம் செய்தல், ஆழமானதொரு விரிவுரை நடாத்துதல் போன்றன மாத்திமன்று. அல்லாஹ்வின் அருளால் இவை சிறந்த, பயனுள்ள வழிமுறைகள் என்பதில் சந்தேகம் இல்லை. அதில் கையாள வேண்டிய வழிமுறைகள் இன்னும் விரிவானவைகளாகவும், பெரியவைகளாகவும், நுணுக்கமானவைகளாகவும் உள்ளன.

தஃவாப்பணியில் நபி (ஸல்) அவர்கள் கையாண்ட வழிமுறைகளை ஒரு மனிதன் ஆய்வு செய்து பார்த்தால் எவ்வளவு பரந்த நோக்கத்துடன் சந்தர்ப்ப சூழ் நிலைகளைப் பயன்படுத்தி, அழைக்கப்படுவோரின் நிலைமைகளைக் கவனத்திற்கொண்டு பொருத்தமான வாரத்தைகளை நபி (ஸல்) அவர்கள் பயன்படுத்தியுள்ளார்கள் என்பதைப் பார்த்து வியந்துவிடுவார். இதற்கு பின்வரும் நிகழ்ச்சி ஒரு எடுத்துக் காட்டாகும்.

ஒரு முறை ரஸூல் (ஸல்) அவர்களுக்கு பட்டினால் ஆன ஒரு ஜோடி ஆடை ஹதியாவாகக் கொடுக்கப்பட்டது. அப்போது அருகிலிருந்த ஸஹாபாக்கள் அதனைப் பிடித்துப்பார்த்து, அவற்றின் மென்மையைக் கண்டு ஆச்சரியப்பட்டனர். இதனைக் கண்ட ரஸூல் (ஸல்) அவர்கள், "இவற்றின் மென்மையைக் கண்டு நீங்கள் ஆச்சரியப்படுகின்றீர்களா? ! சுவர்க்கத்தில் ஸஃது பின் முஆத் (ரழி) அவர்களுடைய கைக்குட்டைகள் இவற்றைவிட மென்மையானவையாகும்" என்று கூறினார்கள்.

(நூல்: புகாரி:)